விசேட பதிப்பு விலை ரூபா 3.50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 04 | 20-09-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 214

### கடற்படை உயரதிகாரிகள் குழு மன்னார் பகுதிக்கு விரைவு

கற்பிட்டியில் பாரிய யுத்தக் கப்பல் கரும்புலிகளால் தகர்க்சப்பட்ட ஒரு சில மணி நேரங்களுக்குள், கடற்படையின் உயரதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ஸ்தலத்திற்கு விரைந்துள்ளதாக வெளிநாட்டு செய்தி நிறுவன மொன்று தெரிவித்துள்ளது.

படையினரின் பூரண கட்டுப்பாடும் கண்காணிப்பும் உள்ள பிரதேசங்களில் புலிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களில் இத்தாக்குதல் சம்பவம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாகவும் அவ்வெளிநாட்டு செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

## கடற்புலிகளின் மற்றுமொரு வீரசாதனை

# கற்பிட்டி கடலில் போர்க் கப்பல் மூழ்கடிப்பு;

# 25க்குமேற்பட்ட சிங்களகடற்படையினர்பலி!

## ஒரு மணி நேரத்தில் கப்பல் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)


கடற்கரும்புலிகளும், கடற்புலிகளும் இணைந்து நடத்திய வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிகள் பொருத்தப்பட்ட "சாகரவர்த்தனா" எனும் யுத்தக் கப்பல் நேற்று நள்ளிரவு மூழ்கடிக்கப்பட்டது. கற்பிட்டிக் கடற்பரப்பில், சிலாவத்துறையில் இருந்து 15 கடல்மைல் தொலைவில் இத்துணிகரத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது.

இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது குறைந்தது நான்கு அதிகாரிகள் உட்பட 25க்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் இரு பெண் கடற் கரும்புலிகள் உட்பட கடற்கரும்புலிகளைச் சேர்ந்த நான்கு பேர் வீரச்சாவடைந்தனர்.

இம் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## நான்கு பீரங்கிகள் அழிப்பு; இரு 50 கலிபர்கள் கைப்பற்றப்பட்டன



அழிக்கப்பட்ட பீரங்கிகள்

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட யுத்தக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த 25 மி. மீ இரட்டைப் பீரங்கிகள் இரண்டு (நான்கு பீரங்கிகள்) கப்பல் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்பாகவே கடற்புலிகளால் நாசமாக்கப்பட்டது.

இக்கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றபட்டன.

## விடுதலைப் புலிகள் தங்கள் பலத்தை

# ஒரு மணி நேரத்தில் கப்பல் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளும், கடற்புலிகளும் இணைந்து நடத்திய வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிகள் பொருத்தப்பட்ட "சாகரவர்த்தனா" எனும் யுத்தக் கப்பல் நேற்று நள்ளிரவு மூழ்கடிக்கப்பட்டது. கற்பிட்டிக் கடற்பரப்பில், சிலாவத்துறையில் இருந்து 15 கடல்மைல் தொலைவில் இத்துணிகரத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது.

இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது குறைந்தது நான்கு அதிகாரிகள் உட்பட 25க்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் இரு பெண் கடற் கரும்புலிகள் உட்பட கடற்கரும்புலிகளைச் சேர்ந்த நான்கு பேர் வீரச்சாவடைந்தனர்.


இம் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று நள்ளிரவு 11.25 மணிக்கு இரு படகுகளில் சென்ற நான்கு கடற் கரும் புலிகள் இவ் யுத்தக் கப்பலின் மீது தாக்குதலை நடத்தினர். இதனைத் தொடர்ந்து கடற்புலிகளும் கப்பலின் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இன்று அதிகாலை 12.30 மணிக்கு இவ்யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது குறைந்தது நான்கு அதிகார்கள் உட்பட இருபத்தைந்துகடற்படையினர் கொல்லப்பட்டனர்.

# நான்கு பீரங்கிகள் அழிப்பு, இரு 50 கலிபர்கள் கைப்பற்றப்பட்டன



அழிக்கப்பட்ட பீரங்கிகள்

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட யுத்தக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த 25 மி. மீ இரட்டைப் பீரங்கிகள் இரண்டு (நான்கு பீரங்கிகள்) கப்பல் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்பாகவே கடற்புலிகளால் நாசமாக்கப் பட்டது.

இக்கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றபட்டன.

# விடுதலைப் புலிகள் தங்கள் பலத்தை மீண்டும் நிரூபித்துள்ளனர்

[லண்டன்]

கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானசிறிலங்கா கடற்படையினரின் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாக பி பி.சி.யின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டிகூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளின் இரு படகுகளால் வழி மறிக்கப்பட்ட இககப்பல் வெடி மருந்துகளால் தகர்க்கப்பட்டது. எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது பெரிய தாக்குதல் இது எனவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என இருதரப்பும் அறிவித்த சூழ்நிலையில் இத்தாக்குதல்இடம் பெற்றிருக்கிறதுஎனவும்அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு முன்பாக விடுதலைப்புலிகள் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள போதும் கூட இராணுவத்தினர் அதை விரும்புவதாக இல்லை. ஏனெனில் இராணுவ ரீதியில் புலிகள் பலவீனப்பட்டிருப்பதாக ஒரு கருத்து நிலவியது. ஆனால் இத்தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகள் தமது பலத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

# இரு பெண் கடற்கரும்புலிகள் உட்பட நான்கு கரும்புலிகள் வீரச்சாவு


(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகள் நடத்திய இவ் வெற்றிகரமான தாக்குதலில், இரண்டு பெண் கடற்கரும்புலிகளும், இரண்டு கடற்கரும்புலிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

★ லெப். கேணல் நளாயினி (விசேட தளபதி, கடற்புலி மகளிர் படைப்பிரிவு).
★ மேஜர் மங்கை (கடற்புலி மகளிர் படை)
★ கப்டன் லக்ஸ்மன்
★ கப்டன் வாமன்.

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# மூழ்கடிக்கப்பட்ட 'கடலரசன்'



# காணாமற்போன கடற்படையினரை தேடும் முயற்சிகள் தீவிரம்

கற்பிட்டியில் தகர்க்கப்பட்ட யுத்தக் கப்பலிலிருந்து, காணாமற் போனவர்களைத் தேடுவதில், கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி சி உலக சேவை தெரிவித்துள்ளது.

மேலதிக கடற்படையினர் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்திருப்பதையும் பி. பி. சி உலகசேவை குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு கடற்படைத் தளபதி உடனடியாகச் சென்றுள்ளார் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தகர்க்கப்பட்ட "சாகர வர்த்தனா" பற்றிய சில விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட சாகர வர்த்தனா போர்க்கப்பல், சிறிலங்காவின் பயன்பாட்டிலுள்ள வீரையா போர்க்கப்பலை விட இரண்டு மடங்கிற்கு மேற்பட்ட எடை கொண்ட கப்பலாகும்.

இக்கப்பல் பற்றிய மேலதிக விபரங்கள் வருமாறு:

பெயர்; சாகர வர்த்தனா 602 p
நிறை; 330 தொன்
நீளம்: $130\frac{1}{2}$ அடி
அகலம்: 23 அடி
இயந்திர சக்தி: 2180 குதிரைவலு
வேகம்: மணிக்கு 15கடல்மைல், 3000கடல் மைலை, மணிக்கு 11 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

ஆயுத விபரம்: 25மி மீ இரட்டைப் பீரங்கிகள் இரண்டு (4பீரங்கிகள்), 50கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள் - இரண்டு

நான்கு அதிகாரிகள் 52 கடற்படையினரை தன்னகத்தே கொண்டது.

# யாழ். பல்கலைக் கழகத்தில் முகாமையியல் துறை

**யாழ்ப்பாணப் பல்கலைக்** கழக கலைப்பீடத்தில் 'முகாமையியல் துறை' என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இப்புதிய துறை உருவாக்கத்திற்கு பெரும் பங்காற்றியதாக அறிய வருகின்றது.

1976 முதல் வணிக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதும், அவர்கள் பொருளியல் துறையின் கீழேயே கல்வி கற்றனர். 1980 களின் ஆரம்பத்தில் அவர்களுக்கென வணிகத்துறை ஒன்று உருவாக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின் வணிகத்துறையுடன் முகாமையியல் துறையும் சேர்ந்து, வணிக முகாமையியல் என்ற பெயரில் இதுவரை காலமும் இயங்கி வந்தது. இத்துறை கலைப்பீடத்தில் ஏறக்குறைய அரைப்பங்கு மாணவர்களைக் கொண்ட பெருந்துறையாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்துமுகாமையியல்துறை வணிகத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு தனித்துறையாக இயங்க பல்கலைக்கழகப் பேரவை அனுமதியளித்துள்ளது. இந்நிலையில் தற்போது வணிகத்துறை கலைப்பீடத்தில் அதிக மாணவர்களைக் கொண்ட பெரும் துறையாக விளங்குகின்றது. புதிய முகாமையியல் துறைக்கு, வணிக முகாமையியல்துறையின் முன்னாள் தலைவர் திரு. எம். நடராசசுந்தரமும், வணிகத் துறைக்கு திரு. கே. தேவராஜாவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நங்கூரம் அறிவியல் ஏடு 2-ம்ஆண்டு பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நங்கூரம் அறிவியல் ஏட்டின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழா நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றல், அமைதி வணக்கத்துடன் விழா ஆரம்பமானது. நங்கூரம் இரண்டாம் ஆண்டு அறிவியல் ஏட்டை தமிழீழவிடுதலைப் புலிகள் உறுப்பினர் வே. பாலகுமாரன் வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார். முதல் பிரதியை செல்வன் அன்ரனியூட் பெற்றுக் கொண்டார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆசியுரையை நிகழ்த்தினார். அடுத்து தலைமையுரையும் வெளியீட்டுரையும் நடைபெற்றதைத் தொடர்ந்து பரிசில் அளிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. தொடர்ந்து கலை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (சி), (பா)

# 56 கடற்படையினர் பலியானதாக இந்திய வானொலி அறிவிப்பு

(கொழும்பு)

கற்பிட்டி கடலில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா கடற்படையினரின் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதால் கடற்படையைச் சேர்ந்த 56 பேர் கொல்லப்பட்டதாகவும் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இதுபற்றி இந்திய வானொலி மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவை சேர்ந்தவர்களால் இக்கப்பல் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகவும், அறுபது பேர் பயணம் செய்த இக்கப்பலில் இருந்து நான்கு பேர் மட்டும் இன்று காலை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிலங்கா தரப்பில் பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)

கற்பிட்டியில், நேற்று நள்ளிரவு மேற் கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல், உயர் பாதுகாப்பு வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரின், தீவிர கண்காணிப்பிலுள்ள பிரதேசத்தில், பாரிய யுத்தக்கப்பல் தகர்க்கப்பட்ட விடயம், பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சில், இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளின் விசேட மகாநாடொன்று நடத்தப்பட்டு நிலைமைகள் ஆராயப்பட்டதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## ஹெய்ட்டி மீது படையெடுப்பு தவிர்க்கப்பட்டது மகிழ்ச்சி

ஐ. நா. செயலாளர்

(வாஷிங்டன்)

ஹெய்ட்டியின் இராணுவத் தலைவர்கள் கடைசி நிமிடத்தில் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் நாட்டை விட்டு வெளியேற வேண்டியது அவசியம் இல்லை. இவ்வாறு வாஷிங்டனில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவத் தலைவர்கள் விரும்பினால் பனாமாவுக்கு அல்லது கனடாவுக்கு அல்லது விடுமுறையில் செல்வதற்கு முன்பு அனுமதிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதே வேளை ஹெய்ட்டியின் மீதான இராணுவப் படையெடுப்பு தவிர்க்கப்பட்டிருப்பது குறித்து ஐ. நா. பொதுச்செயலாளர் வரவேற்பு தெரிவித்துள்ளார். 1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்த திடீர் இராணுவ புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஹெய்ட்டி ஜனாதிபதி ஜெனரல் அரிஸ்டீட் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார். ஐ. நா. பார்வையாளர்களின் குழு விரைவிலேயே ஹெய்ட்டிக்கு செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சேவையை சிறப்பாக செய்த ஆசிரியருக்குபுலமைப்பரிசில்

(கொழும்பு)

சேவையை சிறப்பாகச் செய்த ஆசிரியர்களுக்கு, புலமைப் பரிசில்கள் வழங்கும் போது முதலிடம் வழங்கப்படும் என கல்வி, உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புலமைப் பரிசில்கள் வழங்கும் போது சாரண இயக்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

பாடசாலைப்பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் நாட்டம் காட்டுவோருக்கே, இப்புலமைப் பரிசில்கள் பயனளிக்கக் கூடிய வகையில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசில் வழங்கி கௌரவம்

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் இருந்து முதன்முதலாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட செல்வி கோபாலபிள்ளை கேதாரகௌரிக்கு அமரர் திரு. அ. சின்னையா நினைவுப் பரிசிலை அன்னாரது மகள் திருமதி செ. இரத்தினசபாபதி அண்மையில் வழங்கிக் கௌரவித்தார். (24)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 3 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

## தபால் வாக்களிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## விவசாயப் பயிற்சி நடாத்த ஏற்பாடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாய திணைக்களத்துடன் இணைந்து போதனாசிரியர் பிரிவு ரீதியாக பல பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இந்த வகையில் இன்று 20ம் திகதி ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்திலும், நாகர்கோவிலடியிலும், 22-ம் திகதி மட்டுவில் கண்ணகை அம்மன் வாசிகசாலையிலும், 23ம் திகதி ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையத்திலும்,

## விமானப் போக்குவரத்து பலாலியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானத் தளத்துக்கு நேற்று நள்ளிரவு முதல், விமானங்களின் போக்குவரத்து வழமையைவிட அதிகமாக இருந்தது. இன்று அதிகாலையிலும் விமானப்படையின் போக்குவரத்து விமானமொன்று பலதடவை தரையிறங்கிச் சென்ற வண்ணம் இருந்தது.

## தபால் சேவை தேவைகள் அமைச்சருக்கு தெரிவிப்பு

வடபிராந்தியதபால்மா அத்தியட்சகர் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வடபகுதி தபால் சேவையிலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கியுள்ளதாக தெரிய வருகிறது.

கொழும்பில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தபால் மா அத்தியட்சகர்களிற்கான கூட்டத்தில் வடபகுதியில் தபால் சேவையில் உள்ள குறைபாடுகள் தேவைகள் பற்றி அமைச்சருக்கு விளக்கமாக வடபிராந்திய தபால் மா அத்தியட்சகர் சேதுகாவலர் எடுத்துரைத்துள்ளார்.

வழக்கமாக மாதாந்தம் நடைபெறும் இக் கூட்டமானது புதிய அரசு பதவி ஏற்றதும் புதிய அரசின் புதிய குறிக்கோள்களை தபால் சேவையிலும் நிலைப்படுத்துமுகமாக சில முன்னேற்பாடுகள் செய்யப்பட்டதனால் கடந்தமாதம் கூட்டப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இம்மாதம் தற்பொழுது இக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தபால் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88,நி)

## ஈரல் மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்தது

(லண்டன்)

உலகின் முதலாவது ஈரல் மாற்றுச் சத்திரசிகிச்சையை பிரிட்டிஷ் மருத்துவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர் ஈரல் பாதிக்கப்பட்டிருந்த ஐந்து பேருக்கு செயற்கை ஈரல் பொருத்தப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள கிங்ஸ் கொலிஜ் மருத்துவ மனையைச் சேர்ந்த பேராசிரியர் றொஜர் வில்லியம்ஸ் என்பவரே இச்சத்திரசிகிச்சையை மேற் கொண்டவராவார்.

பிரிட்டனில் வருடாந்தம் ஐந்நூறுக்கு மேற்பட்ட செயற்கை அவயவ மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

## தமிழக காங்கிரஸ் தலைமை விரைவில் மாற்றப்படும்

மத்திய அமைச்சர் தங்கபாலு

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. பிரதமரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவருமான நரசிம்மராவ் இதை செய்வார். வாழப்பாடி ராமமூர்த்தி தலைவர் பதவியிருந்து நீக்கப்படுவார். மேலிடம் என்ன முடிவு எடுத்தாலும், அது தான் இறுதியானது, அதைக் கட்சித் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சர் தங்கபாலு சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் கூறுகையில், காங்கிரஸ்காரர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்த தான் கடுமையாக பாடுபடப்

## தியாகி திலீபன் நினைவு இரவு கலை நிகழ்ச்சிகள்

## விடுதலைப் புலிகள்

இந்த வகையான தாக்குதல்களை விடுதலைப் புலிகள்

கொக்குவில் மேற்கு - மணியர்பதி
ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி
தேவஸ்தான பரிபாலன சபை

அன்புடையீர்,

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் 18-09-94 மாலை 3 மணிக்கு

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 3 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

டுள்ளது.

## தபால் வாக்களிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அண்மையில் வழங்கிக் கௌரவித்தார். (24)

## கொக்குவில் மேற்கு - மணியர்பதி
## ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி
## தேவஸ்தான பரிபாலன சபை

அன்புடையீர்,

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் 18-09-94 மாலை 3 மணிக்கு நடைபெற்றது. அதற்கு மத்தியஸ்தர்களாக கொக்குவில் மத்தி மேற்கு கிராமசேவையாளரான திரு. N. தவநேசனும், கொக்குவில் தெற்கு மேற்கு கிராம சேவையாளரான திரு. T. இரட்னேஸ்வரனும் கடமையாற்றினர். அக்கூட்டத்தில் பின்வருவோர் பரிபாலனசபை அங்கத்தவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்: | உ. தலைவர்: |
| திரு. பொ. முத்துக்குமாரு | திரு. சு. சண்முகநாதன் |
| செயலாளர்: | உ. செயலாளர்: |
| திரு. சி. அன்னலிங்கம் | திரு கு. தெட்சணாமூர்த்தி |
| பொருளாளர்: | உ. பொருளாளர்: |
| திரு. இ. சிறீகாந்தா | திரு. ம. க. குகதாசன் |

நிர்வாகசபை உறுப்பினர்களாக:

| | |
|---|---|
| திரு. சி. கு. சுப்பிரமணியம் | திரு. தே. ஜெயகுமார் |
| திரு. பொ. சிவரத்தினம் | திரு வி. ஞானசொரூபன் |
| திரு. நீ. கிருபாகரன் | திரு. சி. சிவசுப்பிரமணியம் |
| திரு. நா. பத்மராஜா | திரு. சி. சிறீகாந்தா |
| திரு. து. பத்மராஜ் | |

போசகர்கள்: N. தவநேசன் கிராம சேவை அலுவலர்
T. ரட்னேஸ்வரன் கிராமசேவை அலுவலர்

பரிசோதகர்: இ. செல்வநாதன்

(சி-10378) - தலைவர்

## விவசாயப் பயிற்சி நடாத்த ஏற்பாடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாய திணைக்களத்துடன் இணைந்து போதனாசிரியர் பிரிவு ரீதியாக பல பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இந்த வகையில் இன்று 20ம் திகதி ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்திலும், நாகர்கோவிலடியிலும், 22-ம் திகதி மட்டுவில் கண்ணகை அம்மன் வாசிகசாலையிலும், 23ம் திகதி ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையத்திலும், பளை தர்மங்கேணி கிராம முன்னேற்ற சங்கத்திலும், 27ம் திகதி கரணவாய் தற்கு மண்டான் சனசமூக நிலையத்திலும், 29ம் திகதி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் நுணாவில் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும் காலை 10.00 மணிக்கும், 22ம் திகதி கோண்டாவில் கிராம முன்னேற்ற சங்கத்திலும், 27-ம் திகதி உடுவில் ஆயர் கடவை பிள்ளையார் கோவிலடியிலும், மாலை 3 மணிக்கும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

விவசாய அபிவிருத்தியினை ஏற்படுத்தும் நோக்குடன் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படவிருக்கும் இவ்வாறான பயிற்சி வகுப்புகளில் அனைத்து விவசாயிகளையும், உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செய்திக்குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளனர்

## அமைச்சருக்கு தெரிவிப்பு

வடபிராந்தியதபால்மாஅத்தியட்சகர் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வடபகுதி தபால் சேவையிலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கியுள்ளதாக தெரிய வருகிறது.

கொழும்பில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தபால் மா அத்தியட்சகர்களிற்கான கூட்டத்தில் வடபகுதியில் தபால் சேவையில் உள்ள குறைபாடுகள் தேவைகள் பற்றி அமைச்சருக்கு விளக்கமாக வடபிராந்திய தபால் மா அத்தியட்சகர் சேதுகாவலர் எடுத்துரைத்துள்ளார்.

வழக்கமாக மாதாந்தம் நடைபெறும் இக் கூட்டமானது புதிய அரசு பதவி ஏற்றதும் புதிய அரசின் புதிய குறிக்கோள்களை தபால் சேவையிலும் நிலைப்படுத்துமுகமாக சில முன்னேற்பாடுகள் செய்யப்பட்டதனால் கடந்தமாதம் கூட்டப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இம்மாதம் தற்பொழுது இக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தபால் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88,நி)

## தியாகி திலீபன் நினைவு இரவு கலை நிகழ்ச்சிகள்

தியாகி திலீபன் நினைவு நாள்களில்வட்டரீதியாகநடைபெற்றுவரும் இரவுநேர கலை நிகழ்வுகள் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்வுகளில் இன்று, வலிகாமம் கோட்டம் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் வாத்திய விருந்து, பேச்சு, தொடரும் பயணங்கள் (நாடகம்), கிராமிய நடனம் என்பனவும், சங்கானைவட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் தாளலயம் 'உடுவிவ் வட்டம்), தாயகமே தாகம் (நாடகம்), கரகம், கோலாட்டம் என்பனவும், சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில், நாதஸ்வரம், பேச்சு, சிறை (நாடகம்), காவடி, கும்மி என்பனவும் கோப்பாய் வட்டம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் வாய்ப்பாட்டுக் கச்சேரி, வாழவைத்தமண் (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், நல்லூர், யாழ் வட்டங்களில், நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் வயலின் இசை, பேச்சு, விடியலைத்தேடி (தீவக நாடகம்) கோலாட்டம், கும்மி என்பனவும் இடம்பெறவுள்ளன.

தீவக கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் (மாம்பழம் சந்தி) தாகம் (நாடகம் உடுவில் வட்டம்) அபிநய நடனம், கும்மி என்பன இடம்பெறவுள்ளன.

வடமராட்சிக் கோட்டம், உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி சந்தி வைரவர் கோவிலடியில் பேச்சு, கவியரங்கு (பருத்தித்துறை வட்டம்), கலைஞனின் தாகம் (நாடகம்), கோலாட்டம் என்பனவும் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில் பேச்த, வில்லுப்பாட்டு (தம்பிநாதன் குழு), தர்மதேவதை (நாடகம்), கும்மி, காவடி என்பனவும், கரவெட்டி, வட்டத்தில் துன்னாலை கலிகைக்கந்தன் ஆலய முன்றலில் இனியொரு விதி செய்வோம் (நாடகம்), வில்லுப்பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில், பேச்சு, கோலாட்டம், உரிமைத்தேர் (நாடகம்) காவடி என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில், பேச்சு, வயலின் கச்சேரி, அனலாகும் பிறவிகள் (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், கொடிகாமம் வடடத்தில் பேச்சு, கயிற்றுக்காவடி, நெஞ்சம் மறக்குமா? (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், பளைவட்டத்தில் இரட்டைக் கேணி அம்மன்கோவிலடியில் பேச்சு, புதிதாய் எழுவோம் (நாடகம்), ஒளி பிறந்தது (நாடகம்), அபிநய நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

## மாலைதீவின் சிறுதீவுகள் நீரில் மூழ்கும் அபாயம்

மாலைதீவைச் சேர்ந்த சிறிய தீவுகள் கடல் மட்டத்திலிருந்து இரண்டு மீற்றர் உயரத்தை மட்டுமே கொண்டுள்ளன கடல் நீர் மட்டம் உயரும்போது இத் தீவு மறைந்துவிடக் கூடும் என நிபுணர்கள் கூறுகின்றனர்

மேலும் இத்தீவுகளில் சனத்தொகை அதிகரித்து வருவதை தொடர்ந்து குப்பைகளைப் போடுவதற்கே இடமில்லாது உள்ளது

12 சிறிய தீவுகளைக் கொண்டது இந்த மாலைதீவுக் குடியரசாகும் கடலின் நீர்மட்டம் உயர்ந்தால் இந்தத் தீவுகள் மறைந்துவிடக் கூடும் உணவும் சுத்தமானகுடிநீரும் இத்தீவுகளின் பிரதான பொருட்களாகும் இங்கு பிரதான தீவில் 65 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர் போதியளவு நிலம் இல்லாத காரணத்தினால் இடநெருக்கடி தீவிரமாகியுள்ளது நகரத்தில் நாளொன்றுக்கு 28 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றது இவற்றை போடுவதற்கு இடமில்லாதுள்ளது

ற்கை ஈரல் பொருத்தப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள கிங்ஸ் கொலிஜ் மருத்துவ மனை

ற்கை அவயவ மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

## தமிழக காங்கிரஸ் தலைமை விரைவில் மாற்றப்படும்

### மத்திய அமைச்சர் தங்கபாலு

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் 'பதவியில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. பிரதமரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவருமான நரசிம்மராவ் இதை செய்வார். வாழப்பாடி ராமமூர்த்தி தலைவர் பதவியிருந்து நீக்கப்படுவார். மேலிடம் என்ன முடிவு எடுத்தாலும், அது தான் இறுதியானது, அதைக் கட்சித் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சர் தங்கபாலு சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் கூறுகையில், காங்கிரஸ்காரர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்த தான் கடுமையாக பாடுபடப் போவதாகவும் மத்திய அரசின் பல்வேறு கொள்கைத் திட்டங்களை அமுலாக்க காங்கிரசார் கடுமையாக பாடுபடுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

### விடுதலைப் புலிகள்

இந்த வகையான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். கடலைப் பயன் படுத்தும் வசதிகொண்ட போராட்ட அணிகளில் விடுதலைப் புலிகள் முதன்மையானவர்கள். இராணுவத்தின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் பொருட்களை எடுத்துச் செல்லும் படகுகளும் பலமுறை தாக்கப்பட்டுள்ளன.

கடந்த எட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்பு பூநகரி முகாம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு பின்னர் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் தமது பலத்தை வெளிக்காட்டியுள்ள பெரிய தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. எனவும் பி. பி- சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

## செய்தி நிறுவனங்கள் முக்கியத்துவம்

(கொழும்பு)

கற்பிட்டியில் நேற்று நள்ளிரவு, யுத்தக்கப்பலொன்றை கரும்புலிகள் தகர்த்த சம்பவத்துக்கு உலக செய்தி நிறுவனங்கள், முக்கியத்துவம் அளித்து செய்தி வெளியிட்டவண்ணமுள்ளன.

## பாஷையூர் - கொழும்புத்துறை - மணிப்புரி
## வர்த்தக சங்கம் நடாத்தும்
## உண்ணாவிரதம்

லெப். கேணல் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி எமது சங்கம் எதிர்வரும் புதன்கிழமை (21-9-94 இல்) பாஷையூர் அர்ச். அந்தோனியார் தேவாலய முன்றலிலும் வியாழக்கிழமை (22-9-94 இல்) கொழும்புத்துறை சந்தை முன்றலிலும் உண்ணாவிரதம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இவ்வுண்ணாவிரதம் இத்தினங்களில் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும். உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களுக்கு அண்மையிலுள்ள எமது சங்க உறுப்பினர்களை அவ்வத்தினங்களில் தமது வர்த்தக நிலையங்களை முழுமையாகப் பூட்டி உண்ணாவிரதத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ஆ. சாந்தலிங்கம் | | ச. தவசீலன் |
| தலைவர் | (9469) | செயலாளர் |


## விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன் தாள், சொப்பிங் பேக், நயிலோன் கயிறு, பிளாஸ்ரிக் யொக், பிளாஸ்ரிக் வாட்டர் யொக், பிளாஸ்ரிக் பேசன், கோழிக் கூடு வலை, அல்மெனியம், தாச்சி, எனாமல் பெயின்ற் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

நாதன் களஞ்சியம்,
213, கேணல் கிட்டு சாலை,
மருத்துவமனை வீதி,
யாழப்பாணம்.

(9465)

யாழ். ஸ்ரீதரில்
இன்று முதல்
தினசரி காலை 10-30, மாலை 4-00, 6-00 மணி

## இனியொரு விதி

இதனுடன் ஒபறேசன் தவளையும்
[பூநகரிச் சமர்]
காண்பிக்கப்படும்.

(சி-10377)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது